**தலைப்பு - 247 இலங்கை சுங்கம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கையின் 1 ஆம் பந்தியிலிருந்து 2 ஆம் பந்தி வரை திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான பொது தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 3 ஆம் பந்தியிலிருந்து தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

இலங்கை சுங்கத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 நவம்பர் 20 ஆந் திகதி இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத்

திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவினமும்

இலங்கைச் சுங்கத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,079 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 2,014 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க திணைக்களத்தின் தேறிய ஏற்பாடுகளிலிருந்து ரூபா 65 மில்லியன் அல்லது 3 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழும் | 1,680.69 | 1,659.49 | 21.20 | 1.26 |
| மூலதனம் | 398.11 | 354.14 | 43.97 | 11.05 |
| மொத்தம் | **2,078.80** | **2,013.63** | **65.17** | **3.13** |

## 2. வருமான கணக்கு

மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்

இலங்கைச் சுங்கம் 2014 ஆம் ஆண்டிற்காக 12 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 453,120 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 398,617 ஆன வருமானத்தை சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிபிடப்பட்ட வருமானத்தின் 88 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | திருத்திய வருமான மதிப்பீடு | உள்ளவாறான வருமானம் | (குறைத்துக் கூட்டப்பட்டவை)/ கூடுதலாக கூட்டப்பட்டவை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 10.01.01.00 | 85,000.00 | 77,726.31 | (7,273.69) | 91 |
| - மேற்படி - | 10.01.02.00 | 25.00 | 24.08 | (0.92) | 96 |
| - மேற்படி - | 10.01.04.00 | 80,000.00 | 68,646.23 | (11,353.77) | 86 |
| - மேற்படி - | 10.01.05.01 | 40,000.00 | 35,622.38 | (4,377.62) | 89 |
| - மேற்படி - | 10.01.05.02 | 5,000.00 | 3,084.68 | (1,915.32) | 62 |
| - மேற்படி - | 10.01.08.00 | 65,000.00 | 47,952.91 | (17,047.09) | 74 |
| - மேற்படி - | 10.02.05.01 | 61,000.00 | 57,204.26 | (3,795.74) | 94 |
| - மேற்படி - | 10.02.05.02 | 0 .00 | 12.12 | 12.12 | |
| - மேற்படி - | 10.02.05.03 | 40,000.00 | 28,732.33 | (11,267.67) | 72 |
| - மேற்படி - | 10.02.05.04 | 70,000.00 | 76,435.13 | 6,435.13 | 109 |
| - மேற்படி - | 10.02.05.99 | 7,000.00 | 3,087.14 | (3,912.86) | 44 |
| - மேற்படி - | 20.03.02.17 | 95.00 | 89.28 | (5.72) | 94 |
| **மொத்தம்** | | **453,120.00** | **398,616.85** | **(54,503.15)** | 12 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

இலங்கைச் சுங்கத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 24701 | 46.00 | 25.47 | 35.00 | 43.84 | 300.00 | 208.45 |

### 2.3.2 வணிக ரீதியற்ற முற்பணக் கணக்குகள்

இலங்கை சுங்கத்தினால் வணிக ரீதியற்ற முற்பணக் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

இலங்கைச் சுங்கத்திற்குரிய வணிக ரீதியற்ற முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 24702 | 10.00 | 8.08 | 2.00 | 4.43 | 20.00 | 24.62 |

### 2.4 கட்டுநிதிக் கணக்கு

இலங்கை சுங்கத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 3.31 மில்லியனாக இருந்தது.

### 2.5 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இலங்கை சுங்கத்தின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,295.81 மில்லியனாக இருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

| வைப்புக்களின் பெயர் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| நானாவித வைப்புக்கள் | 6000/0000/00/0015/0127/000 | 4,011.25 |
| சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் | 6000/0000/00/0006/0061/000 | 4,167.98 |
| சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் | 6000/0000/00/0006/0062/000 | 1,116.58 |
| மொத்தம் | | **9,295.81** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் இலங்கை சுங்கத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, வணிக ரீதியற்ற முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட திருப்திகரமானதாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 247 – இலங்கை சுங்கம்

## 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

இலங்கை சுங்கத்தினால் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடய இலக்கம்/ கணக்கு இலக்கம் | கணக்கின் பெயர் | 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையில் தாமதம் |
|---|---|---|
| 24701 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று | 01 மாதம் |
| 6000/0000/00/0006/0033/000 | சுங்க மேலதிகநேர மற்றும் கப்பல் சரக்குப் பரீட்சிப்புக் கட்டணங்கள் மற்றும் சுங்கத் தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியம் | 01 மாதம் |
| 6000/0000/00/0006/0061/000 | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் | 01 மாதம் |
| 6000/0000/00/0006/0062/000 | சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் | 03 மாதம் |
| 7000/0000/00/0247/0002/000 | கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவின முற்பணக்கணக்கு | 28 நாட்கள் |

## 3.2 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

இலங்கை சுங்கத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| ஒதுக்கீட்டு(வாக்குப் பண) பேரேடு | நிதிப் பிரமாணம் 447 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

## 3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிப் பிரமாணம் 272(3) இன் பிரகாரம் ரூபா 108,483,557 பெறுமதியான 94 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 01 செலவின விடயத்திற்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 70 சதவீதமாக இருந்தது.

(ஆ) 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டு வரையறைக்குள்ளேயே செலவினங்கள் முகாமை செய்யப்பட

வேண்டிய போதிலும், இலங்கை சுங்கத்தினால் அந்த அறிவுறுத்தல்களைக் கருத்திற் கொள்ளாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு

(i) எரிபொருள் செலவின விடயத்திற்கான மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 40,000,000 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 39,477,893 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவினங்களுக்கு மேலதிகமாக மேலும் ரூபா 3,993,341 வெகுமதி நிதியத்தின் கீழான எரிபொருள் நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டு நிதி ஏற்பாடு மிகைப்பதை தவிர்க்கப்பட்டிருந்தது.

(ii) மின்சாரம் மற்றும் நீர் செலவின விடயத்திற்காக மதிப்பிடப்பட்ட ஏற்பாடு ரூபா 140,000,000 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 139,999,063 பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவினத்திற்கு மேலதிகமாக கட்டுநாயக்க சுங்க ஓய்வறைக்குரிய ரூபா 273,603 தொகையான மின்சார செலவினம் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்டு நிதி ஏற்பாடு மிகைப்பதை தவிர்க்கப்பட்டிருந்தது.

(iii) தளபாடங்கள், அலுவலக உபரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை கையேற்பதற்காக ரூபா 7,000,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 6,973,427 கூட்டுத் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவினத்திற்கு மேலதிகமாக ரூபா 12,164,593 தொகை முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(iv) எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடு என்ற விடயத்திற்காக ரூபா 46,500,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 46,408,561 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அச் செலவினத்திற்கு மேலதிகமாக ரூபா 8,839,849 தொகை முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(இ) மேற்குறித்த சுற்றறிக்கையின் 2.1.3 (i) பந்தியின் பிரகாரம் மின்சாரம் மற்றும் நீர் பட்டியல் கிடைத்து ஒரு மாதத்திற்குள் தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டில் ரூபா 3,403,540 ஆன தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 வருமான கணக்கு

-----------------------------

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 12 வருமானக் குறியீடுகளுக்காக வருமானம் மதிப்பீட்டை தயார் செய்தல், வருமான சேகரிப்பு கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தல் போன்ற கடமைப்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் 12 வருமானக் குறியீடுகளுக்குரிய ரூபா 453,120 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 398,617 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 88 சதவீதம் ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக இலங்கைச் சுங்கத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 398,617 மில்லியனான வருமானம் முன்னைய ஆண்டினை விட ரூபா 35,831 மில்லியன் அதிகரிப்பாகும். மோட்டார் வாகன உற்பத்தி வரி, ஏனைய உற்பத்தி வரி மற்றும் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி போன்றவற்றின் அதிகரிப்பு என்பன திரட்டிய வருமான அதிகரிப்பிற்காக தாக்கமளித்திருந்ததுடன், முன்யை ஆண்டினை விட அவ்வரி வருமானம் முறையே 37.68 சதவீதம், 22.69 சதவீதம் 11.61 சதவீதத்தால் அதிகரித்தருந்தது. இவ்வாறு அதிகரித்திருந்த வருமானத்தில் ரூபா 20,918 தொகை அல்லது 58.38 மோட்டார் வாகன உற்பத்தி உற்பத்தியால் சேகரிக்கப்பட்ட வருமானமாக இருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் வருமான கட்டமைப்பினுள் கூடிய பங்களிப்பினை இறக்குமதி வரி, மோட்டார் வாகன உற்பத்தி வரி, துறைமுக மற்றும் விமான நிலைய வரி, சிகரட்டிற்கான உற்பத்தி வரி மற்றும் விசேட வியாபாரப் பொருள் வரி என்பவற்றிலிருந்து கிடைக்கப்பற்றிருந்ததுடன், அது மொத்த வருமானத்தில் முறையில் 19.5 சதவீதம், 19.17 சதவீதம், 17.23 சதவீதம், 14.36 சதவீதம் மற்றும் 12.03 சதவீதமாக இருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது சிகரட் உற்பத்தி வரி வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைவடைந்திருந்ததுடன், அக்குறைவு ரூபா 1,330 மில்லியனாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டினை விட 2.27 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது.

(உ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 16,027,833,120 ஆன வருமானம் நிலுவையாக காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலவீச்சிற்கு உரியதாக இருந்தது. அந் நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஊ) 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டின் நிலுவை வருமானம் ரூபா 2,801,897,010 ஆல் அல்லது 21.18 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. நிலுவை வருமானத்தின் 99 சதவீதம் அல்லது ரூபா 15,879 தொகையான இறக்குமதி வரி, பெற்றோலிய உற்பத்தி வரி, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி, இறக்குமதி செஸ் வரி மற்றும் மோட்டார் வாகன உற்பத்தி வரி ஆகிய வரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

(எ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,107,052,583 தொகையான பெற்றோலியப் பொருட்கள் அடிப்படையிலான நிலுவை உற்பத்தி வரி அளவு மற்றும் ரூபா 809,372,564 தொகையான தண்டப் பணத்தில் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய பெற்றோலியப் பொருட்கள் அடிப்படையிலான நிலுவை உற்பத்தி வரி மற்றும் தண்டப்பணத்தின் அளவு முறையே ரூபா 2,037,095,057 தொகை மற்றும் ரூபா 319,573,717 ஆக இருந்தது.

(ஏ) 2 கம்பனிகளால் செலுத்த வேண்டிய ரூபா 200,023,755 கூட்டுத்தொகையான நிலுவை உற்பத்தி மதுவரி மற்றும் தண்டப்பணம் 2002 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வந்த போதிலும், அவ்வரி மற்றும் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஐ) பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன், வரி அறவிடுவதைப் பின்போடுதல் அடிப்படையில் அரச நிறுவனங்களுக்கு வாகனங்களை விடுவித்தமையால் நிலுவை மோட்டார் வாகன உற்பத்தி வரி 2008 ஆம் ஆண்டிலிருந்து திரண்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான மீதி ரூபா 1,155,858,936 ஆக இருந்தது.

(ஒ) நிலுவை உற்பத்தி வரி வருமானம் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போது 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 75 சதவீதத்தினாலும் 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 307 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

(ஓ) நிலுவை உற்பத்தி வரி அறவிடுவதற்காக 1989 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியில் வழக்குத் தொடரப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் 208 நிறுவனங்களிடமிருந்து ரூபா 30,418,421 நிலுவை உற்பத்தி வரித் தொகையும் ரூபா 16,566,261 ஆன தண்டப்பணம் என்பன மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் ரூபா 10,000 இற்கு குறைந்த நிலுவை உற்பத்தி வரி அறவிடப்பட வேண்டிய 76 நிறுவனங்கள் காணப்பட்டன.

(ஔ) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக 12 வருமானக் குறியீடுகளுக்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(க) இலங்கை சுங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட வருமானச் சேகரிப்பு செயற்பாட்டினுள் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சுங்க பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் அதில் சில பின்வருமாறு.

(i) இறக்குமதி கொள்கலன்களுக்குரிய மீளாய்வாண்டின் போது 192,848 சுங்கக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 22,728 சுங்க குறிப்புக்கள் அல்லது 11.78 சதவீதம் மாத்திரம் முறையான பரிசோதனை செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. 88.22 சதவீதமான அளவுகள் பரிசோதனையொன்றில்லாமல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது 175,062 சுங்கக் குறிப்புக்களில் 27,222 அல்லது 15.5 சதவீதம் முறையான பரிசோதனையின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது சுங்கக் குறிப்புக்களின் அளவு முன்னைய ஆண்டினை விட 17,786 ஆல் அதிகரித்திருக்கையில் கொள்கலன்கள் முறையான பரிசோதனையின் பின்னர் விடுவிக்கப்பட்ட அளவு 22,728 ஆக அல்லது 11.78 சதவீதமாக இருந்தன. அம்முறைமையின் கீழ் சுங்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக இறக்குமதிகள் விடுவிப்பதற்கு இயலுமை காணப்படுவதாக கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதுள்ளது.

(ii) சுங்கப் பரிசோதனையின் தன்மையைத் தீர்மானித்தல், ஸ்கிரீன் (Screening) பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள பிரதி சுங்கப் பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்காக முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. உரிய உத்தியோகத்தர்களின் அனுபவம் மற்றும் இறக்குமதியாளர்களின்

வரலாற்றுத் தரவுகளின் பிரகாரம் பரிசோதனை நடைமுறை தீர்மானிக்கப்படுகின்றதாக விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இறக்குமதியாளர்களின் வரலாற்றுத் தரவுகள் முறைமையொன்று ஸ்கிரீன் பிரிவில் தாபிக்கப்படாதிருந்தமையால் பரிசோதனை நடைமுறை உத்தியோகத்தர்களின் விருப்பப்படி தீர்மானிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய பயணிகள் பிரிவில் அமைந்துள்ள சுங்க கிளையின் 2013 ஆம் ஆண்டில் ரூபா 498,370,685 தொகையான வருமானம் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 461,589,939 வரை 7.38 ஆல் குறைவடைந்திருந்தது.

(iv) 2014 ஆம் ஆண்டின் போது 06 விமானப் பயணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அதன் மூலம் 391 சந்தர்ப்பங்களில் ரூபா 21,383,250 பெறுமதியான வர்த்தக தன்மையிலான பொருட்கள் பயணிகள் பிரிவினூடாக கொண்டு வரப்பட்டிருந்தது. அதற்காக வரியாக ரூபா 6,488,782 தொகையும் தண்டப்பணமாக ரூபா 10,742,625 தொகையும் அறவிடப்பட்டிருந்தது. கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தினூடாக இலங்கைக்கு வருகின்ற மட்டும் வெளியேறுகின்ற பயணிகளுக்கு சேவைகளை வழங்குவது நோக்கமாக இருந்த போதிலும், அநேகமான பயணிகள் விமான நிலையத்தினூடாக வர்த்தக ரீதியான தன்மையிலான பொருட்களை இலங்கைக்கு கொண்டு வரப்படுவது அவதானிக்கப்பட்டது.

(v) மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு 2013 ஆம் ஆண்டின் போது நாளொன்றில் வருகை தந்த மற்றும் வெளியேறிய பயணிகளின் சராசரி முறையே 57 மற்றும் 59 ஆகவும், 2014 ஆம் ஆண்டின் போது நாளொன்றில் வருகை தந்த மற்றும் வெளியேறிய பயணிகளின் சராசரி முறையே 45 மற்றும் 55 ஆகவும் இருந்தன. அவ்வாறே 2013 ஆம் ஆண்டினுள் சேகரிக்கப்பட்ட வருமானம் 23,019,686 ஆக இருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது அது ரூபா 16,695,478 வரை அதாவது 27 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(vi) திருகோணமலை சுங்க நிவாரண அலுவலகத்தின் சுங்க நிவாரண நடவடிக்கைகளுக்காக 02 கப்பல்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன், அந்த இரண்டு கப்பல்களில் ஒன்று பைபர் கிளாஸ் வகையான பாதுகாப்பு கப்பல் 2004 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு,

கடற் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அக்கப்பல் சிதைவடைந்து காணப்படுகின்றது. C – 22 வகையான மற்றைய பாதுகாப்பு கப்பல் 2013 யூன் 30 ஆந் திகதியின் பின்னர் கடற்கரை காவல் சுற்றுலா நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டு சுங்க நிவாரண அலுவலக வளவில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2013 பெப்ரவரி 18 ஆந் திகதி இக்கப்பலை திருத்தியமைப்பதற்காக ரூபா 92,780 தொகை செலவிடப்பட்டிருந்தது. கடல் காவல் சுற்றுலா நடவடிக்கைகளுக்காக கப்பல் ஓட்டுனர் மற்றும் லஸ்கார் உத்தியோகத்தர்கள் இணைக்கப்படாதிருந்தமை காரணமாக நிவாரண நடவடிக்கைகளுக்காக கடல் பாதுகாப்பு சுற்றுலா நடவடிக்கைகள் 2015 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையிலும் திருப்திகரமான மட்டத்தில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) 2015 ஆம் ஆண்டு வரை உற்பத்தி வரிப் பிரிவின் உற்பத்தி வரிக் கொடுப்பனவிற்காக 135 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. 2015 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையில் 38 நிறுவனங்கள் வரி செலுத்தும் நிறுவனங்கள் செயற்பாட்டில் காணப்பட்டன. ஏனைய கோவைகள் காலத்திற்கு காலம் வரியிலிருந்து நீங்கியமை காரணமாக முடிவுறுத்தப்பட்டிருந்தது. இலங்கை புகையிலை கம்பனி மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தவிர உற்பத்தி வரி செலுத்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வரியின் பெறுமதி சேகரிக்கப்பட்ட மொத்த உற்பத்தி வரி வருமானத்தின் 3.4 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே கம்பனி பதிவாளர் திணைக்களம், பிரதேச செயலகங்கள் போன்ற நிறுவனங்கள் ஊடாக உற்பத்தி வரி செலுத்துவதற்கு உள்ளாகும் பொருள் உற்பத்தி செய்யப்படும் புதிய நிறுவனங்கள் மேலும் காணப்படுகின்றவா என்பதை இனங்காண்பதற்கு இலங்கை சுங்கத்தின் உற்பத்திப் பிரிவினால் போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) உற்பத்தி வரிக்கு உட்பட்ட மோட்டார் வண்டி ஒன்று சேர்க்கும் நிறுவனமொன்றுக்கு தொழிற்சாலை விலையின் 30 சதவீதம் உள்நாட்டுப் பெறுமதி சேர்க்கும் அடிப்படையில் ரூபா 8,553,631,500 தொழிற்சாலை விலையான 5057 வாகனங்களுக்காக ரூபா 7,424,688,775 தொகையான உற்பத்தி வரி சலுகையொன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொழிற்சாலை விலையில் 30 சதவீதம் அதாவது ரூபா 2,566,089,450 தொகையான உள்நாட்டு பெறுமதி சேர்த்தலுக்காக வழங்கப்பட்டுள்ள

வரிச் சலுகை தொழிற்சாலை விலையில் 86.8 சதவீதம் அல்லது ரூபா 7,424,688,775 ஆக இருந்தது.

(ix) வாகனங்களை சேகரிக்கும் நிறுவனமொன்றினால் உற்பத்தி வரிச் சலுகைய எதிர்பார்த்த 410 வாகனங்கள் தொடர்பாக உள்நாட்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட கிரயப் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்கு தவறியிருந்தமை அடிப்படையில் குறித்த உற்பத்தி வரியை செலுத்த வேண்டுமென நீதிமன்ற தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த 410 வாகனங்களில் இதுவரையில் 46 வாகனங்களுக்காக உற்பத்தி வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. உரிய உற்பத்தி வரி கொடுப்பனவின் பின்னர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்வதற்கு முடியுமாக இருந்த போதும் இந்த 46 வாகனங்கள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்படாதிருந்தமை, குறித்த கொள்வனவாளர்கள் இம்மோட்டார் வண்டிகளை போலியாக ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருக்கக் கூடியமையாலும் மேற்குறித்த வாகனங்கள் 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்டு இதுவரை வருடக் கணக்காக கடந்திருந்த போதும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட எதிர்வரும் நடவடிக்கை என்னவென்று தெளிவாகவில்லை. இந்த 46 வாகனங்களுக்காக அண்மித்த வகையில் ரூபா 9.02 மில்லியன் அளவிலான வரித்தொகை அறவிடப்படவேண்டியிருந்தது.

(x) சம்பவக் கோவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

- தனியார் நிறுவனமொன்றின் பெயரில் 2012 ஒக்தோபர் 09 ஆந் திகதி இலங்கைக்கு கிடைத்திருந்த தலை பூச்சு மற்றும் வாசனை காயக்கட்டு உள்ளடங்கிய MSKU 6074095 கொண்ட கொள்கலன் இறக்குமதி செய்யப்பட்ட நிறுவனத்தினால் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் குறித்த கொள்கலன் தமது கட்டளையொன்று அடிப்படையில் கிடைக்கப்பெற்றதல்ல என மீள்ஏற்றுமதி செய்யுமாறு 2012 நவம்பர் 05 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனத்தினால் 03 மாதங்களின் பின்னர் அதாவது 2013 பெப்ரவரி 11 ஆந் திகதி மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மீள்ஏற்றுமதி

செய்வதற்கோ அல்லது சுங்க வரி செலுத்தி விடுவிப்பதற்கோ அனுமதி கோரப்பட்டிருந்தது.

அதுவரையில் அதாவது, 2012 நவம்பர் 05 ஆந் திகதி வரையில் மத்திய பரிசோதனை பிரிவினால் சுங்க பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2013 பெப்ரவரி 21 ஆந் திகதி இலங்கை சுங்கத்தின் மதிப்பீட்டுப் பிரிவினால் இப்பொருட்களின் பெறுமதி ரூபா 19,761,606 தொகை மற்றும் அதன் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய சுங்க மற்றும் ஏனைய வரிகளின் பெறுமதி ரூபா 10,511,749 தொகையாக மதிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மத்திய கைத்தவிர்ப்பு பிரிவின் மூலம் விற்பனை செய்வதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் மத்திய கைதவிர்ப்பு பிரிவின் வேண்டுகோளின் அடிப்படையில் 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி மதிப்பீட்டு பிரிவினால் அப்பொருட்கள் ரூபா 2,152,215 இற்கு அதாவது ரூபா 17,609,391 இற்கு குறைவாக மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி அடிப்படையில் குறித்த இறக்குமதி செய்த நிறுவனத்திற்கு விற்பனை செய்தமையால் ரூபா 28,121,140 ஆன வருமானமொன்று அரசிற்கு கிடைக்காமல் போயிருந்தது.

- 2012 நவம்பர் 05 ஆந் திகதி Kota Harmani கப்பலில் இறக்கப்பட்ட தலை பூச்சு மற்றும் வாசனை காயக்கட்டு உள்ளடங்கிய BMOU 2552654 மற்றும் BMOU 2595487 கொண்ட இரண்டு கொள்கலன்கள் இறக்குமதியாளரால் பொறுப்பேற்கப்படாமையால் சுங்க மத்திய பரிசோதனை பிரிவினால் சுங்க பரிசோதனையொன்று 2012 திசெம்பர் 19 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 14,729,263 தொகையாகவும் அதற்காக செலுத்த வேண்டிய வரி அளவு ரூபா 12,823,823 ஆகவும் சுங்க மதிப்பீட்டுப் பிரிவினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

  பின்னர் பொருட்களை விடுவிப்பதை நிராகரித்த நிறுவனத்தினாலேயே குறித்த பொருள் இருப்பை முழுமையாக வரி செலுத்தி விடுவிப்பதற்கு 2013 பெப்ரவரி 20 ஆந் திகதி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கையில் அதற்காக அனுமதி

வழங்காமல் மத்திய பரிசோதனை பிரிவினால் மேற்கொண்ட சுங்க பரிசோதனையின் பின்னர் 2013 மார்ச் 28 ஆந் திகதி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அரசுடமையாக்குவதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. ரூபா 14,729,263 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த பொருள் இருப்பு பின்னர் அதாவது 2013 ஏப்ரல் 09 ஆந் திகதி மீண்டும் ரூபா 5,505,377 இற்கு அதாவது ரூபா 9,223,886 குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் கையேற்பதை நிராகரித்த நிறுவத்திற்கே வரி உட்பட ரூபா 6,474,324 இற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் ரூபா 21,078,762 தொகையான வருமானமொன்று அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது.

(xi) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரால் 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய 1875/30 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரம் மூலம் பொருட் குறியீடு 0701.90 இலக்கத்தின் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 01 கிலோ கிராம் உருளைக் கிழங்கிற்காக அது வரை அறவிடப்பட்ட ரூபா 5 விஷேட வியாபார வரி 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ரூபா 15 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி மற்றும் அதற்கு பின்னர் கொழும்பு துறைமுகத்திற்கு வந்த 4 கப்பல்கள் மூலம் கொண்டு வரப்பட்ட 1,184,320 கிலோ கிராம் உருளைக் கிழங்கிற்கு விஷேட வியாபார வரியாக 1 கிலோ கிராமிற்கு ரூபா 5 மாத்திரம் இறக்குமதியாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு இலங்கை சுங்கத்தின் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்ததன் காரணமாக ரூபா 11,843,200 தொகையான வரி வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக இலங்கை சுங்கவரி மத்திய புலனாய்வு பிரிவினால் சுங்க விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(xii) சுகநலன் உதிரிப்பாகங்களாக வெளிப்படுத்தி இந்தியாவிலிருந்து கொழும்பு துறைமுகத்தின் ஊடாக டுபாய் வரை போக்குவரத்து செய்யப்பட்ட கொள்கலனொன்று 2013 நவம்பர் 09 ஆந் திகதி சுங்க உத்தியோகத்தர்களால் பரிசோதித்த போது அக் கொள்கலனில் 6.74 மெற்றிக் தொன் பாரமுடைய ரூபா 33.7 மில்லியன் பெறுமதியுடன் கூடிய சந்தன மர இருப்பொன்று காணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டதுடன் 2013 நவம்பர் 14 ஆம் திகதி இலங்கை சுங்கத்தின் தடுப்பு பிரிவினால் இது தொடர்பாக புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அப்புலனாய்வின் பின்னர் 2014 ஆகஸ்ட் 13 ஆந் திகதி ஆரம்ப புலனாய்வு உத்தியோகத்தரால் அம் மர இருப்பை சுங்க கட்டளைச்

சட்டத்தின் 37 ஆம் பிரிவு மற்றும் 2007 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 1517/19 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் அரசுடமையாக்குவதற்கு கட்டளையிடப்பட்டு அத்திகதியிலேயே அக் கட்டளை சுங்க கட்டளை அதிகாரச்சட்டத்தின் 163 ஆம் பிரிவின் பிரகாரம் சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ரூபா 5 மில்லியன் இலகு தண்டமொன்றின் கீழ் விடுவிக்கப்பட்டு ஹொங்கொங் அரசிற்கு ஏற்றுமதி செய்வதற்கு கப்பல் முகவர் நிலையம் பெயரிட்ட நபரொருவருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அடுத்த நாள், அதாவது 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி ரூபா 5 மில்லியன் தண்டப் பணம் அறவிடப்பட்டிருந்த போதிலும் சந்தன மர இருப்பை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் சுங்க பணிப்பாளரால் மேற்படி வழங்கிய தீர்ப்பு செல்லுபடியற்றதாக்கப்பட்டதுடன், ரூபா 5 மில்லியன் தண்டப் பணத் தொகையை அந்த நபருக்கே மீளச் செலுத்துவதற்காக 2014 ஒக்தோபர் 03 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கப்பல் முகவரினால் பெயர் குறிப்பிடப்பட்ட நபர் தொடர்பாக பொருட்கள் அனுப்பிய அல்லது பெறவேண்டிய தரப்பினரிடமிருந்து விசாரிக்காது ரூபா 33.7 மில்லியன் பெறுமதியன வெண் சந்தன மர இருப்பினை ரூபா 5 மில்லியன் தண்டப்பணம் மாத்திரம் அறவிடப்பட்டு விடுவிப்பதற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்தமை

- இந்தியாவிலிருந்து துபாய் வரை போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த மர இருப்பு சுங்க புலனாய்வின் பின்னர் ஹொங்கொங் அரசிற்கு ஏற்றுமதி செய்வதற்கு எந்த அடிப்படையில் கட்டளையிடப்பட்டிருந்ததென வெளிப்படுத்தப்படாமை.

- சுங்க கட்டளைச் சட்டத்தின் 163 ஆம் பிரவின் பிரகாரம் சுங்கப் பணிப்பாளர் மீள் திருத்தமாக வழங்கிய கட்டளை மீண்டும் திருத்தம் செய்யும் அதிகாரம் நிதி அமைச்சரிடம் இருந்த போதிலும், தண்டமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் தொகை மீள் செலுத்துவதற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை.

- சுங்க கட்டளைச் சட்டத்தின் 154(1) ஆம் பிரவின் பிரகாரம் சுங்க பரிசோதனையொன்றின் தீர்வொன்று தொடர்பாக ஏற்றுக்கொள்ள முடியாத தரப்பினர் அது தொடர்பாக வழங்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியுமாக இருப்பதுடன் குறித்த தரப்பினர் அவ்வாறான செயற்பாடொன்றை எடுக்காத சந்தர்ப்பத்தில் அத்தவறு தொடர்பாக விதிக்கப்பட்ட தண்டம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பணம் சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திரட்டு நிதியத்திற்கும், முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திற்கும் உத்தியோகத்தர்களின் வெகுமதி கொடுப்பனவுகளுக்குரிய அளவு இனங்காணப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறித்த புலனாய்வின் போது தண்டப்பணத்திற்கு உட்பட்ட நபர் நீதிமன்ற நடவடிக்கையொன்று எடுக்கப்படாதிருக்கையில் ரூபா 5 மில்லியன் ஆன பணத்தை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்து 02 மாதங்களின் பின்னர் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் அந்நபருக்கு மீளச் செலுத்த நடவடிக்கை எடுத்தமை.

- இப்புலனாய்வின் போது வழங்கப்பட்ட கட்டளை சரியானது அல்ல என சுங்க உத்தியோகத்தர்கள் சமர்ப்பித்திருந்த முறைப்பாடு காரணமாக சுங்கப் பணிப்பாளரால் புலனாய்வின் தீர்வினை செல்லுபடியற்றதாக்கி மர இருப்பை விடுவிக்காதிருப்பதற்கும் மீண்டும் புலனாய்வை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை.

(xiii) 2013 சனவரி 03 ஆந் திகதி முதல் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் முகவர்களினால் BMW 730 D SE வகையான 12 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், அத்தகைய சகல சந்தர்ப்பங்களிலும் வாகனத்தின் இறக்குமதி கப்பல் கேள்வு மட்டும் (CIF) பெறுமதி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட எல்லையினை விஞ்சாத வகையில் அமெரிக்க டொலர் 45,000 ஆக குறிப்பிடப்பட்டு வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் இவ்வகையான வாகனமொன்றின் பெறுமதி தொடர்பாக இணையத் தளத்தினைப் பரிசோதித்த போது ஏற்றுக்கொள்ளப்பட்ட உதிரிப்பாகங்களுடன் (CIF)

பெறுமதி பிரித்தானிய பவுன் 45,000 ஆக தீர்மானிக்கப்பட்டிருந்தது. (அண்ணளவாக அமெரிக்க டொலர் 74,000) அண்மித்ததாக அவதானிக்கப்பட்டதுடன், 2015 சனவரி 15 ஆந் திகதிய MV/01/2015 ஆம் இலக்க இலங்கை சுங்க விலைக் குழு அறிக்கையின் மூலமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி யூரோ 42,500 ஆக தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான கூடிய பெறுமதியடைய வாகனங்கள் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட கூடிய எல்லையை விஞ்சாத வகையில் குறை மதிப்பீடு செய்யப்பட்டு வரி கொடுப்பனவு செய்வதற்கு இறக்குமதியாளர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் 12 வாகனங்கள் மூலம் மாத்திரம் ரூபா 352,604,621 ஆன வரி வருமானமொன்று அரசினால் இழக்கப்பட்டிருந்தது.

(xiv) டபள் கெப் (Double Cab) மாதிரியிலான வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ள வடிவமைப்பிற்கு சமமான முறையில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த டொயோட்டா ஹிலுக்ஸ் விகோ ஸ்மார்ட் கெப் (Totoya Hilux Smart Cab) மாதிரியிலான வாகனங்களுக்காக சிங்கல் கெப் மாதிரியிலான வாகனங்களுக்காக அறவிடப்படுகின்ற சுங்க வரி விகதத்திற்கு அமைய வரி அறவிடுவதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்ததுடன், அது டபள் கெப் வாகனங்களுக்காக அறவிடப்பட்டுள்ள வரியுடன் ஒப்பிடும் போது ஒரு வாகனத்திலிருந்து ரூபா 1 மில்லியன் அளவில் குறைவாக அறவிடப்பட்டிருந்தது. இலங்கை சுங்கத்தினால் டொயோட்டா ஹிலுக்ஸ் ஸ்மார்ட் கெப் மாதிரிக்காக வரி அறவிடுவதற்கு புதிய பொருட்கள் வகையொன்று 2014 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், அது வரையில் 3000 வாகனங்கள் அளவில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(xv) திணைக்களம் வெளியிட்டிருந்த 2010 திசெம்பர் 10 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க மற்றும் 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க வர்த்தக தீர்வை மற்றும் முதலீட்டு கொள்கைகள் சுற்றறிக்கைகள் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்டுள்ள சலுகை அனுமதிப்பத்திர அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் மிகவும் கூடிய பெறுமதியுடன் கூடிய ஆடம்பர வாகனங்கள் சலுகை அனுமதிப்பத்திரத்தின் உயர் எல்லைக்கு இணங்கும் வகையில் குறை மதிப்பீடு செய்வதன் மூலம்

மிகவும் கூடிய சுங்க வரி கிடைக்க வேண்டிய வாகனங்கள் குறைந்த வரி செலுத்தி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன.

(xvi) பாவிக்கப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்யும் போது சுங்க வரி கணக்கிடும் நடவடிக்கைகளுக்காக பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத்தின் பெறுமதியோ அல்லது வாகனமொன்றின் மாதிரியொன்றிற்காக இலங்கைச் சுங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி (பெறுமானத்தேய்வு, கப்பல் கட்டணம், காப்புறுதி போன்ற செலவினங்கள் சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர்) ஆகிய இரண்டு பெறுமதியோ அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த மேர்சிடீஸ் பென்ஸ் (Mecedes Benz) E 220 மாதிரியான 03 வாகனங்களுக்குரிய வரி அறவிடும் போது பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதி அடிப்படையிலேயே வரி கணக்கிடப்பட்டதன் காரணமாக 3 வாகனங்களில் ரூபா 4,608,730 தொகை சுங்க வரியாக குறைத்து அறவிடப்பட்டிருந்தது.

(xvii) அரசின் ஊழியர்களுக்கு உரித்தான இரண்டு சலுகை வாகனங்களை இறக்குமதி அனுமதிப்பத்திரங்களின் கீழ் 2013 திசெம்பர் 03 ஆந் திகதிய CBMVI 5839 மற்றும் CBMVI 5840 ஆம் இலக்க சுங்க குறிப்புக்களின் மூலம் பீ.எம்.டப். M5 வகையான சிலின்டர் கொள்ளளவு 4395 உடைய பாவிக்கப்பட்ட 2 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், அந்த வாகனமொன்றின் பட்டியல் பெறுமதி அமெரிக்க டொலர் 24,444.51 ஆக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த பெறுமதி அடிப்படையில் ஒரு வாகனத்திலிருந்து ரூபா 3,247,383 தொகை வீதம் ரூபா 6,495,766 தொகை சுங்க வரியாக அறவிடப்பட்டிருந்தது. இவ் வாகன வகைக்காக இலங்கை சுங்கத்தினால் நிலையான விலையொன்று தீர்மானிக்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படாததுடன், அதற்கு சமமான வகையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் நிலையான விலை விபரங்களுடன் ஒப்பிடும் போது இவ்வாகன வகைக்காக அமெரிக்க டொலர் 35,000 இற்கு மேற்பட்ட நிலையான விலையொன்று நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்ததுடன்,அந்த நிலையான விலை கவனத்தில் கொள்ளப்பட்டு சுங்கவரி கணிப்பீடு செய்யும் போது ஒரு வாகனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய சுங்க வரி ரூபா 7,100,468 ஆக இருந்தது. அதன் பிரகாரம் இந்த இரண்டு வாகனங்களுக்கும்

ஆகக் குறைந்தது ரூபா 7,705,170 தொகையான சுங்கவரி வருமானம் அரசாங்கத்தினால் இழக்கப்பட்டிருந்தது. இறக்குமதியாளர் சமர்ப்பித்த முறைப்பாட்டை கவனத்தில் கொண்டு விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதி வரிக் கணிப்பீட்டிற்காக கவனத்தில் கொள்ளப்பட்டதாக சுங்க உத்தியோகத்தர்கள் தெரிவித்திருந்த போதிலும் அந்த முறைப்பாடு 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(xviii) 2013 நவம்பர் 01 ஆந் திகதி முதல் 2014 மே 16 ஆந் திகதி வரை 8705 ஆம் சுங்கப் பத்திரத்தின் கீழ் விசேட செயற்பாட்டு வாகனங்களாக இறக்குமதி செய்யப்பட்ட இருபத்திரெண்டு (22) வாகனங்கள் இரட்டை நோக்கு வான் வண்டிகளாகவும் ஐம்பத்தாறு வாகனங்கள் (56) மோட்டார் லொறியாகவும் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரை விசேட நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிரீட் கலவை லொறிகள் (Concrete Mixer Lorry) உட்பட 358 வாகனங்கள் மோட்டார் லொரிகளாகவும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டன. அதன் பிரகாரம் அவ்வண்டிகளுக்கு அதன் விசேட நோக்கங்களிலிருந்து விலகி சாதாரண டிரக் வண்டியொன்றாகவோ லொறி வண்டியொன்றாகவோ பாவிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. சாதாரண வான் மற்றும் டிரக் வண்டி விசேட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களாக இறக்குமதி செய்வதன் மூலம் சாதாரண வான் வண்டியாக இறக்குமதி செய்யும் போது செலுத்த வேண்டிய வரித் தொகை ரூபா 15 இலட்சத்திலிருந்து 30 இலட்சத்திற்கு இடைப்பட்ட அளவிலும், டிரக் வண்டியாக இறக்குமதி செய்யும் போது செலுத்த வேண்டிய சுங்க வரித் தொகை ரூபா 5 இலட்சத்திலிருந்து 20 இலட்சத்திற்கு இடைப்பட்ட அளவிலும் குறைத்துக்கொள்ளும் மோசடியான நோக்கத்தில் சில தனியார் நிறுவனங்களால் இவ்வாறு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2010 ஆண்டு முதல் 2014 மே 16 ஆந் திகதி வரை இறக்குமதி செய்யப்பட்ட 22 வான்கள் மற்றும் 414 டிரக் வண்டிகள் என்பவற்றிலிருந்து குறைந்தது ரூபா 243 மில்லியன் சுங்க வரி வருமானமொன்று அரசாங்கத்திற்கு இழப்பாகியிருந்தது.

(xix) பொருள் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தும் அடிப்படை நோக்கில் குறைந்த சுங்கவரி செலுத்த வேண்டிய சுங்கக் குறியீட்டு இலக்கமொன்றின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் இந்நாட்டில் பிரயாணிகள் போக்குவரத்திற்காக பாவனைக்கு எடுக்கப்படுகின்ற சொகுசு மோட்டார் வாகனங்களாக மாற்றுஞ் செய்யப்பட்டமையின் காரணமாக பாரியளவான சுங்கவரி வருமானமொன்று அரசினால் இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- இணையத்தளங்களில் வாகனங்கள் விற்பனைக்காக வெளியிடப்பட்ட விளம்பரங்கள் மற்றும் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் "PP" முதல் "PY" வரை வாகனங்களை இனங்காணும் ஆங்கில எழுத்து தொகுதியின் கீழ் இரட்டை நோக்கு சிங்கல் கெப் வண்டியாக பதிவு செய்யப்பட்டிருந்த 13 வாகனங்களும், "L" வாகனங்களை இனங்காணும் ஆங்கில எழுத்து தொகுதியின் கீழ் மோட்டார் லொறி (சிங்கல் கெப் உட்பட) வண்டியாக பதிவு செய்யப்பட்டிருந்த 04 வாகனங்களும், "PA" முதல் "PM" வரை வாகனங்களை இனங்காணும் ஆங்கில எழுத்து தொகுதியின் கீழ் டபள் கெப் வண்டி மற்றும் வான் வண்டிகளாக பதிவு செய்யப்பட்டிருந்த 04 வாகனங்களும் பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் மோட்டார் கார்களாக மாற்றப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாகனங்களை இறக்குமதி செய்யும் போது மோட்டார் காராக கருதி வரி கணக்கிடப்பட்டிருந்தால் மேற்படி 21 வாகனங்களில் 16 வாகனங்களில் இருந்து மாத்திரம் சுங்க வரியாக ரூபா 91,460,000 ஆன வருமானமொன்று உழைக்ககூடியதாக இருந்தது.

- வாகனங்களை பதிவு செய்யும் இலக்கம் 24, 25, 31, 32, 40, 50, 51, 64 மற்றும் 65 உட்பட மிகவும்பழமையான இலக்க தொகுதியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மிகவும் நவீன அதி சொகுசு வாகனங்கள் பலவும், அதற்கு மேலதிகமாக மேற்படி வாகனங்களை பதிவுசெய்யும் இலக்கத்தின் கீழ் ஆரம்ப பதிவு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் "E" ஆங்கில எழுத்து தொகுதி இலக்கம் பெற்றுக்கொண்ட புதிய மாதிரியில் மாற்றப்பட்ட அதிகளவான நவீன அதி சொகுசு வாகனங்கள் தொகையொன்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

- 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவில் காணப்படுகின்றவாறு அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் உற்பத்தி வரிக்காக பதிவு செய்யப்படாத தனியார் நிறுவனமொன்றினால் சிங்கல் கெப் வண்டி மற்றும் டபள் கெப் வண்டி பின்னர் ஐந்து கதவு ஸ்டேஷன் வெகன் வண்டியாக (லேண்ட் ரோவர் டிபென்டர் ஜீப் வண்டி) மாற்றியமைத்து வியாபாரமொன்றாக நடாத்திச்செல்லப்படுவதுடன் இவ்வாறு மாற்றியமைப்பதற்காக ரூபா 1.4 மில்லியன் முதல் 2.4 மில்லியன் வரை பணம் அறவிடப்பட்டிருந்தது.

- மேற்படி நிறுவகத்தினால் மோசடியாக மாற்றியமைக்கப்பட்ட பெருந்தொகையான வாகனங்கள் நாட்டில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், வாகனங்கள் மோசடியாக மாற்றப்பட்டிருந்தமையும் அதற்காக இணையத்தளங்களினூடாக விளம்பரப்படுத்தி பகிரங்கமாக நடாத்திச் செல்லக்கூடிய வியாபாரங்கள் காணப்படுவது அதிகரித்தமை மூலம் உற்பத்தி வரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

- இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்ட விதிகளின் பிரகாரம் 02 ஆண்டுகளை விட பழமையான ஆட்களைக் கொண்டு செல்லும் மோட்டார் வண்டிகள் (சுங்க குறிப்பு இலக்கம் 8703 இன் கீழ்) மற்றும் 04 ஆண்டுகளை விட பழமையான பொருள் போக்குவரத்து மோட்டார் வண்டி (சுங்க குறிப்பு இலக்கம் 8704 இன் கீழ்) இறக்குமதி செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 04 ஆண்டுகள் வரையான பழைய சிங்கள் கெப் வண்டி மற்றும் டபள் கெப் வண்டி இறக்குமதி செய்து ஆட்களை கொண்டு செல்லும் மோட்டார் வண்டிகளாக மாற்றப்பட்டமை மூலம் 02 ஆண்டுகளுக்கு மேல் பழமையான ஆட்களை கொண்டு செல்லும் மோட்டார் வண்டிகளை இறக்குமதி செய்தல் தடையை மீறி நடவடிக்கை எடுக்க முடியுமாக இருப்பதனால், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு பிரமாணங்களை மிகவும் கடுமையாக மீறப்பட்டிருந்தது. அவ்வாறே இதன் காரணமாக 04 ஆண்டுகள் வரை பழமையான ஜீப், சிங்கள் கெப் வண்டி மற்றும் டபள் கெப் வண்டி என்பன இறக்குமதி செய்யப்பட்டு மோட்டார் கார் வண்டியாக மாற்றப்பட்டு பாவிப்பதற்கு முடியுமாக இருப்பதால் சுங்கத்தினால் வாகனத்திற்காக அறவிடப்படும் சுங்க வரி வருமானம் குறைவடைவதற்கும் இந்நிலைமை காரணமாக இருந்தது.

## 3.6 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

---

24701 ஆம் விடய இலக்கமுடைய அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 10,809,826 தொகையான நிலுவை மீதிகளில் ரூபா 7,672,767 தொகை 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 ஆக்ஸ்ட் 18 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய பட்டோலைகளில் உத்தியோகத்தர்களின் இறந்த, ஓய்வுபெற்ற திகதி என்பன குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், உரிய ஆண்டு மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) மரணித்த, ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் முற்பண மீதிகளை மீள அறவிடுவது தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக அம் முற்பண மீதிகள் அசைவுறாத மீதிகளாக காணப்பட்டன.

(ஈ) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்கிடையே மேலும் காணப்பட்ட ரூபா 95,820 தொகையான வேறுபாட்டிற்கு காரணம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) இடமாற்றம் பெற்றுச் சென்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 875,306 கூட்டுத்தொகையான கடன் மீதி நிதிப்பிரமாணம் 485(4) மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 1:1:6 மற்றும் 1:1:7 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நீண்டகாலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 5,133,031 தொகையான ஓய்வு பெற்ற, மரணித்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற

உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது. இது தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.1.3 மற்றும் 11.9.1 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கடன் தொகை பெற்றுக்கொண்டு 06 வாரங்களுக்குள் காணியின் உரித்தை சமர்ப்பிக்காவிட்டால் கடன் தொகை உடனடியாக மீள அறவிடப்பட வேண்டியிருப்பதுடன், அவ்வாறு செய்யப்படாவிட்டால் முழுக்கடன் தொகையையும் மீளச் செலுத்தி முடியும் வரை மாதாந்த கடன் தவணையை இரண்டு மடங்காக்கி வட்டி வீதத்தை 5 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டிய போதிலும், 03 சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.7 கைப்பற்றப்பட்ட மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான செலவினத்தின் முற்பணக் கணக்கு

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்று தெரிவிக்க முடியவில்லை.

(ஆ) முற்பணக் கணக்கின் அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24,618,348 தொகையாக இருந்ததுடன், அந்நிலுவை முற்பணங்களைத் தீர்ப்பதில் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(இ) நிலவை மீதிகள் (தீர்க்கப்படாத முற்பணங்கள்) தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை மேலதிக பெறுவனவுகளாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,502,415 தொகையான 337 மீதிகள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) செலவினத்திற்காக முற்பணம் பெற்றுக்கொண்ட ஏதேனுமொரு சம்பவமொன்று தொடர்பாக புலனாய்வு நடவடிக்கைககள் மேற்கொள்ளும் போது அச்சம்பவத்தின் சுங்கத் தவறு இல்லையென

அவதானிக்கப்பட்டதன் பின்னர் அச்சம்பவத்திற்குரிய சுங்க புலனாய்வு நடவடிக்கைகள் நிறுத்தப்படும் சந்தர்ப்பங்களில், அப்புலனாய்விற்காக அப் புலனாய்விற்காக பெற்றுக்கொண்ட முற்பணத் தொகையை ஈடுசெய்யக்கூடிய முறைமையொன்று காணப்படவில்லை.

(உ) அறிக்கைகள் மற்றும் ஏடுகள் முறையாக பேணப்படாமை, கண்காணிப்பு போதியதாக இல்லாமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.8.1 கூட்டிணைந்த திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை சுங்கத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 யூலை 09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.8.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒருமுறையேனும் கூட்டப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டிற்காக 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

இலங்கை சுங்கத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்தின், நிதியம் மூலம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட முறையே ரூபா 78,683,345 தொகை மற்றும் ரூபா 5,031,062 தொகையான கணனிகள் மற்றும் கணனி உபபாகங்கள் என்பன கணனி பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திலிருந்து 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட முறையே ரூபா 84,656,355 தொகை மற்றும் ரூபா 7,133,531 தொகையான நிலையான சொத்துக்கள், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009/(02) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 02 மற்றும் 03 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் சரியாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 810,724,986 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள், நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 802(iii) இன் பிரகாரம் மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய DMA/2009(02) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பாக அனைத்து தகவல்களையும் வாகனம் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொள்கலன் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக 7.03 சதவீத வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 15,600,000 தொகையான கடன்தொகை பயன்படுத்தப்பட்டு 2005 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த நான்கு 4 ஸ்கேன் இயந்திரங்களில் 2 இயந்திரங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் எஞ்சிய 2 இயந்திரங்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ii) இலங்கை சுங்கத்தினால் ரூபா 859,500 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 07 கைவிரல் அடையாள இயந்திரங்கள் இது வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. சுங்க உத்தியோகத்தர்களால் கைவிரல் அடையாள இயந்திரங்களின் பயன்பாடு நிராகரிக்கப்பட்டமை மற்றும் புதிய சுங்க கட்டிடத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இவ்வியந்திரங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை இதற்கான அடிப்படைக் காரணமாக இருந்தது.

**(இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க அரச நிதிச் நிதிச் சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டின் 54 பிரிவுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2015 ஒக்தோபர் 30 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டின் போது கொள்வனவுகள் மற்றும் கைதவிர்ப்புக்கள் செய்யப்பட்ட சொத்துக்கள்

தொடர்பான தகவல்கள் 2006 யூலை 30 ஆந் திகதிய 422 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் இணைப்புக்களின் பிரகாரம் ஆவணப்படுத்தப்பட்டு அந்த அறிக்கை நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அரச நிதிப் பணிப்பாளருக்கு அனுப்பியமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஈ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

இலங்கை சுங்கத்திற்குச் சொந்தமான காணி சுங்கத்தின் அனுமதியின்றி வெளித்தரப்பினர்களால் பயன்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(i) இலங்கை சுங்கத்தினால் சட்டரீதியான கையளித்தல் ஒன்று இல்லாமல் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 36’x15’ அளவிலான காணித்துண்டொன்று வழங்கப்பட்டிருந்தது.

(ii) இலங்கை சுங்கத்திற்குச் சொந்தமான வடக்கு கிழக்கு பிரதேசத்தில் உள்ள சில காணிகள் சட்டரீதியான கையளிக்கப்படாமல் முப்படையினரின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருந்தது.

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

---

இலங்கை சுங்கத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 74,098,634 தொகையான பொறுப்புக்களில் ரூபா 7,900,000 தொகை 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 திசெம்பர் 04 ஆந் திகதிய 238/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.11 ஆம் பந்தியின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் தீர்ப்பதற்குரிய பொறுப்புக்களாக ரூபா 74,098,634 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது அப்பொறுப்புக்களுக்கு மேலதிகமாக ரூபா 26,415,680 ஆன பொறுப்புக்கள் 2015 ஆம் ஆண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருந்தன.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 327,567 தொகையான கொடுப்பனவுகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட பொறுப்புக்களாக DGSA 8(I) பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.10 இணங்காமைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | 190 பொது மாதிரியின் பிரகாரம் லீவு தொடர்பான பதிவேடொன்று வைக்கப்பட வேண்டிய போதிலும் சில பிரிவுகளில் அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XII ஆம் அத்தியாயத்தின் 22.4 ஆம் பிரிவு | சம்பளமற்ற லீவு தொடர்பாக 96 ஆம் பொதுமாதிரிப் படிவத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மாதாந்தம் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) XV ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | நியமன நிபந்தனையின் பிரகாரம் சேவையில் நிரந்தரமாக்கும் பொருட்டு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஏதேனும் தகைமைகளை |

| | | | |
|---|---|---|---|
| | | | பெற்றுக்கொள்வதற்காக அல்லாமல் தகுதிகாண் காலத்தில் உள்ள உத்தியோகத்தரொருவர் கல்வி மற்றும் பயிற்சிக்காக வெளிநாட்டிற்கு அனுப்பக்கூடாத போதிலும், ஒரு உத்தியோகத்தர் தொடர்பாக அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (iv) | XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | | கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் சுங்க அலுவலகத்தின் வருகை பதிவேடு பதவிநிலை உத்தியோகத்தரொருவரால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) | LVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவு | | ஆரம்ப புலனாய்வை தாமதிக்காமல் பூர்த்தி செய்வதற்குரிய ஒவ்வொரு தரப்பினரும் தொடர்ச்சியாக பார்த்துக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>-------------------------------------------------- | | |
| (i) | நிதிப்பிரமாணம் 115(4) | 149,892 | கடந்த நிதியாண்டிற்குரிய உரித்துக்களை கையளிக்கும் போது அக்கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் அதற்காக அதிகாரமளித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 447 | | பொது 138 மாதிரியின் கீழ் ஒதுக்கீட்டு பேரேட்டின் ஒவ்வொரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஏற்பாடு மற்றும் அதற்கு பின்னர் பெற்றுக்கொண்ட மேலதிக ஏற்பாடு பதிவுசெய்யப்பட்டு பதவிநிலை உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப் |

படாதிருந்ததுடன், நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏற்பாடு மாற்றல்கள் சான்றுறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன், கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவு உறுதிச்சீட்டின் இலக்கமும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 30 செலவின விடயங்களுக்கிடையே 22 செலவின விடயங்களின் திரட்டிய செலவினம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 447 (1) மற்றும் (4)

ஒதுக்கீட்டு (நியம) செலவின பேரேட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமாணம் 272 -

2014 ஆம் ஆண்டிற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கோவையாக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப்பிரமாணம் 396 (ஈ)

வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காலாவதியான 13 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை

--------------------------------------------

2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02(1) ஆம் பந்தி

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் வருகை சுங்க அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்தும் கைவிரலடையாள இயந்திரமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சுங்கத்தின் சுற்றறிக்கை

-------------------------------------------------

2010 திசெம்பர் 19 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் வருகை அலுவலகத்திற்கு வெளியேற்ற பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதும், 2013 யூன் மாதத்திலிருந்து 2015

பெப்ரவரி 25 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 05 சந்தர்ப்பங்களில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**3.11 செயலாற்றல்**

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் முன்னேற்றங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) வருமான சேகரிப்பு

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட வரி வருமானம் மற்றும் உள்ளவாறான வரி வருமானம் என்பன முன்னைய ஆண்டின் வரி வருமானத்துடன் ஒப்பிடப்பட்டு பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | | 2014 | | | 2013 | |
|---|---|---|---|---|---|---|
| வரி வகை | திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம் | உள்ளவாறான வரி வருமானம் | உள்ளவாறான வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக | திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் வரி வருமானம் | உள்ளவாறான வரி வருமானம் | உள்ளவாறான வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| வெளிநாட்டு வர்த்தக அடிப்படையில் வரி | | | | | | |
| இறக்குமதி வரி | 85,000 | 77,726 | 91.44 | 82,591 | 74,668 | 90.41 |
| ஏற்றுமதி வரி | 25 | 24 | 96 | 20 | 22 | 110 |
| துறைமுக மற்றும் விமான நிலைய வரி (இறக்குமதி) | 80,000 | 68,646 | 85.81 | 61,004 | 61,506 | 100.82 |
| செஸ் வரி – (இறக்குமதி) | 40,000 | 35,622 | 89.06 | 37,362 | 33,004 | 88.34 |
| மோட்டார் வண்டி அனுசரணை வரி | - | - | - | - | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிரதேச உட்கட்டமைப்பு வசதிகள் வரி | - | - | - | - | 1 | - |
| செஸ் வரி – (ஏற்றுமதி) | 5,000 | 3,084 | 61.68 | 3120 | 3,087 | 98.94 |
| விசேட வியாபாரப் பொருட்கள் வரி | 65,000 | 47,952 | 73.77 | 50,106 | 46,705 | 93.21 |
| உற்பத்தி வரி | - | - | - | - | - | - |
| --------------------- | | | | | | |
| சிகரட் | 61,000 | 57,204 | 93.78 | 58,222 | 58,534 | 100.54 |
| மதுபானம் | - | 12 | - | - | 0.1 | - |
| பெற்றோலியம் | 40,000 | 28,732 | 71.83 | 35,849 | 27,131 | 75.68 |
| மோட்டார் வாகனம் | 70,000 | 76,435 | 109.19 | 71,906 | 55,517 | 77.21 |
| ஏனையவை | 7,000 | 3,087 | 44.1 | 5,347 | 2,516 | 47.05 |
| ஆடைகளுக்கான உள்நாட்டு விற்பனைக்கான கட்டணங்கள் | 95 | 89 | 93.68 | 95 | 91 | 95.79 |
| | ---------- | ---------- | | ---------- | ---------- | |
| கூட்டுத்தொகை | **453,120** | **398,613** | **87.97** | **405,622** | **362,781** | **89.44** |
| | ====== | ====== | | ====== | ====== | |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டின் போது திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தின் உள்ளவாறான செயலாற்றல் 12.03 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது அது 10.56 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) 05 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 50,000 மில்லியனை மிகைத்து வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த எதிர்பார்க்கப்பட்ட வருமான இலக்கு மோட்டார் வண்டி உற்பத்தி வருமானங்களிலிருந்து மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் செயலாற்றல் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 109.19 சதவீதமாக இருந்தது. ஏனைய 4 வருமான குறியீடுகளில் எதிர்பார்த்த இலக்கை அடைந்திருக்கவில்லை.

(iii) 2014 ஆம் ஆண்டில் திரட்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட அடிப்படையிலான வரி வருமானம் ரூபா 237,915,432,907 தொகை மற்றும் திரட்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி வருமானம் ரூபா 44,583,121,716 தொகையாகவும் இருந்தன. பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தொடர்பாக வருமான கணக்கீட்டு பொறுப்பு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் இருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்த பெறுமதிசேர் வரி வருமானத்தில் 42.99 சதவீதமும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி வருமானத்தில் 53.29 சதவீதமாக முறையே ரூபா 102,281,490,518 தொகையும் ரூபா 23,761,586,645 ஆன அளவு இலங்கை சுங்கத்தினால் சேகரிக்கப்பட்டிருந்தது.

## 3.12 வங்கிக் கணக்கினை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

### சீராக்கம் செய்யப்பட வேண்டிய நிலுவை

இலங்கை சுங்கத்தினால் 2015 மே மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காணப்பட்ட சீராக்கம் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சீராக்கம் தொடர்பான தகவல்கள் | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | 6 மாதங்களுக்கு மேற்பட்ட 1 ஆண்டிற்கு கீழான | 1 ஆண்டிற்கு மேற்பட்ட 3 ஆண்டுகளிற்கு கீழான | 3 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தீர்வையாகாத வைப்புக்கள் | - | - | 4,166,667 | 4,166,667 |
| வழங்கப்பட்டிருந்தும் கொடுப் பனவுக்கு முன் வைக்கப்படாத காசோலைகள் | 4,433,842 | 353,432 | - | 4,787,274 |
| இனங்காணப்படாத வரவு | 3,428,598 | 63,024 | 4,166,667 | 7,658,289 |
| இனங்காணப்படாத செலவு | 1,052,972 | 253,058 | - | 1,306,029 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கி நடைமுறை கணக்கொன்றிலிருந்து வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்கு முன் வைக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த ரூபா 230,882 தொகையான 13

காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கொன்றின் வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 76,261,274 ஆக இருந்த போதிலும், அது வங்கிக் கணக்கிணக்க கூற்றில் ரூபா 76,271,274 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மூன்று ஆண்டுகளை விஞ்சிய தீர்வையாகாத ரூபா 4,166,167 கூட்டுத்தொகையான காசோலைகள் தொடர்பாக சரியான கணக்கீட்டு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 5,806,850 தொகையான இனங்காணப்படாத கொடுப்பனவுகள் 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 1,093,036 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகள் 2015 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்கு முன் வைக்கப்படாத காசோலை பட்டியலின் கூட்டுத்தொகை ரூபா 6,886,232 ஆன 25 காசோலைகளுக்குரிய காசோலைகளின் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(எ) தொடரிலக்கத்தின் பிரகாரம் காசோலைகள் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், வழங்கப்படும் காசோலை காசேட்டில் தொடராக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு காசோலைகள் இலக்க ஒழுங்கில் தொடராக அறிக்கையிடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஏ) நிதிப்பிரமாணம் 386(3) பிரகாரம் எழுதப்படும் ஒவ்வொரு காசோலையினதும் அடியிதழில் கொடுப்பனவு உறுதிச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.13 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைச் சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலான இருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான கொடுக்கல்வாங்கலொன்று பின்வருமாறு.

சுங்க நூதனசாலை நிர்மாண ஒப்பந்தம் 2013 மார்ச் 14 ஆந் திகதி முதல் 90 நாட்களுக்குள் அதாவது 2013 மே 28 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை காலத்தினுள் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், அவ்வப்போது 07 சந்தர்ப்பங்களில் காலம் 599 நாட்கள் வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன், 2015 சனவரி 27 ஆந் திகதி ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

### 3.14 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைச் சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவ்வாறான சந்தர்ப்பமொன்று பின்வருமாறு.

இலங்கை சுங்கத்தினால் விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனிக்கு கையளிக்கப்பட்ட ஸ்கேன் இயந்திரங்களுக்கான சேவைக் கட்டணமாக 2009 மே மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரை சுங்கத்தினால் செலுத்தப்பட்ட ரூபா 4,887,500 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விமானநிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.15 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நடமாடும் மூன்று 03 ஸ்கேன் இயந்திரங்களைத் பழுதுபார்ப்பதற்காக ரூபா 17,503,409 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு கிரய மதிப்பீடான்று செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.16 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் நலிவுகள் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி பிரதிச் எச்.எவ்./4/CUS/115 -27 ஆம் கடிதத்தின் பிரகாரம் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புப் படிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ஒவ்வொரு உத்தியோகத்தரினதும்

செயலாற்றல் முறையான மதிப்பீட்டுக் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் 100 சதவீத செயலாற்றலுக்காக ஊக்குவிப்பு படிகள் வழங்கப்பட்டிருந்தன. விடுமுறைகளுக்காக கழிக்கும் போது விடுமுறைகள் சரியாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 751(1) இன் பிரகாரம் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறும் அனைத்துப் பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

## 3.17 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 340 | 284 | 56 |
| (ii) | மூன்றாம் நிலை | 1,152 | 720 | 432 |
| (iii) | இரண்டாம் நிலை | 970 | 659 | 311 |
| (iv) | ஆரம்ப நிலை | 488 | 324 | 164 |
| | மொத்தம் | **2950** | **1,987** | **963** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 963 வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை சுங்கம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.